புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

==================================================================

*வீரமாமுனிவர் உணர்த்தும் நூலறிவு*

==================================================================

**கட்டுரையாளர்**
**இரா. பிரேமாவதி**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,(பகுதி நேரம்)*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*
*திருப்பத்தூர்- 635 601.*

==================================================================

**முன்னுரை**

*உலக மொழிகளில் உயர்வான இடத்தைப் பெற்றுள்ள தமிழ்மொழி நாளும் வளர்ந்து வருகின்ற மொழியாகும். இம்மொழியைப் போற்றிப் புகழ்ந்து வளர்த்தெடுக்கும் பணியில் பலரும் ஈடுபட்டு உழைத்து வருகின்றனர். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் மட்டுமின்றி பிற மொழியினரும் போற்றி வளர்த்த பெருமை தமிழுக்கு உண்டு. குறிப்பாக சமயம் பரப்ப வந்த கிறித்துவர்கள் தமிழ் வளர்க்கும் தொண்டினைச் செய்தார்கள். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர் வீரமாமுனிவர் ஆவார். பல நூல்களையும் கற்றும்; இயற்றியும் தொண்டாற்றிய அவர் தாம் இயற்றிய தேம்பாவணியில் நூல்கள் குறித்துப் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார். அவற்றுள் தேம்பாவணி முதல் காண்டத்தில் உள்ள நாட்டுப்படலம் முதல் மகிழ்வினைப்படலம் வரையுள்ள ஒன்பது படலங்களில் காணலாகும் நூல்கள் குறித்த கருத்துக்களை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**வீரமாமுனிவரின் வாழ்க்கை**

*வீரமாமுனிவர் இத்தாலி நாட்டில் உள்ள மாண்டுவா மாவட்டத்தைச் சேர்ந்த காஸ்திக் கிளியோன் என்னும் ஊரில் 1680 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8 ஆம் நாள் பிறந்தார். இவர் தம் பெற்றோர் கொண்டல்போ பெஸ்கி- எலிசபெத் ஆகியோர். இவரது இயற்பெயர் கான்ஸ்டாண்டியுஸ் ஜோசப் பெஸ்கி என்பதாகும். கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்ச், போர்த்துகீசியம் உள்ளிட்ட மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். 1698 ஆம் ஆண்டு அக்டோபரில் தம் முப்பதாம் வயதில் தமிழ் மொழியைக் கற்றுச் செய்யுள், உரைநடை, இலக்கணம், அகராதி போன்ற அனைத்துத் துறை நூல்களையும் படைத்தளித்தார்*

**தேம்பாவணி**

*வீரமாமுனிவர் படைத்த இலக்கியங்களில் சிறப்புற்று விளங்குவது தேம்பாவணியாகும். இயேசுபிரானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்டது தேம்பாவணி. 1726 ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இந்நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டது. தேம்பாவணி மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றிலும் 12 படலங்கள் வீதம் மொத்தம் 36 படலங்களைக் கொண்டு 3615 விருத்தப்பாடல்களைக் கொண்டதாகும். இக்காப்பியத்தில் அறம், துறவு, கல்வி, நூல்கள், இறை இயல்பு, சூசையப்பர் மற்றும் மரியாளின் பெருமைகள் முதலான கருத்துகள் நிறைந்து தமிழ் மணம் கமழ்கின்றது.*

**நூல்- விளக்கம்**

*நூலினை மாண்பினை விளக்குகின்ற பவணந்தி முனிவர் உடலில் உள்ள அறிவின் வளத்தை வளரச் செய்து, நினைக்கப்பட்;ட தீமையாகிய அறியாமையைக் கெடுத்து, தீய மரத்தின் மிகுதியான கோணலைப் போக்கும் எற்று நூலின் தன்மையைப் போல மனிதரது மனத்தின் கோணலைப் போக்கும் என்ற கருத்தினை பின்வருமாறு உரைக்கிறார்.*

*உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்*

*புரத்தின் வளம்முருக்கிப் பொல்லா—மரத்தின்*

*கனக்கோட்டம் தீர்க்கும் நூல் அஃதேபோல் மாந்தர்*

*மனக்கோட்டம் தீர்க்கும் நூல் மாண்பு*

*(நன்னூல்- 25)*

**நூலின் வகைகள்**

*கலைகளைப் போற்றிய தமிழ்நாட்டில் ஒவ்வொரு கலைக்கும் தனித்தனியே நூல் இருந்துள்ளதை அறிய முடிகிறது. கட்டிடம், சிற்பம், ஓவியம், போன்ற கலைகளைப் போற்றி வளர்த்த தமிழகத்தில் பல்வேறு நூல்கள் இருந்து வருகின்றன. வளன் பிறந்த சூதேய நாட்டின் தலைமைப் பதியாகிய எருசலேம் நகரத்தின் சிறப்பைக் கூறும் பகுதியில், அளவு நூல், அறநூல், போர்ச்சட்ட நூல், சக்கரநூல் ஆகியவற்றைக் கற்றிருந்தவர்கள் இருந்தனர் என்ற கருத்தினை விளக்குகிறார்.*

*இட்டநூல் வழாமை ஓடி எல்லை இல் ஓடும் வீதி*

*சுட்டநூல் அறிஞர் கல்வித் துணிவொடு வளர்த்த மாடம்,*

*சட்ட நூல் உடைய வீரர், கற்பின் தகை நலார் முறையும்,*

*வட்ட நூல் வழாமையோடு மலி நலம் கிளக்கல் உற்றேன்.*

*நகரப்படலம் : 15.*

*நகரத்தில் வாழும் மக்கள் அனைத்துவிதமான நூல்களையும் கற்றிருந்தவர்களாக இருந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டுவதன் மூலம், அறிவுத்திறன் வாய்ந்தவர்களாக அந்த நகரமாந்தர்கள் விளங்கியதை வீரமாமுனிவர் உணர்த்துகிறார்.'கொத்தர் இட்ட அளவுநூல் தவறாமல் இருபுறமும் அமைந்து எல்லை இல்லாது நெடுக ஓடும் தெருக்களும், சிறந்தவையெனச் சுட்டிக் காட்டத் தக்க அறநூல் அறிஞரின் கல்வித் தெளிவுபோல் வளர்ந்த மாளிகைகளும், போர்ச்சட்டநூல் அறிவு கொண்ட வீரரின் முறைமையும் கற்பின் பெருமை வாய்ந்த மகளிர் தம் முறைமையும், சக்கரநூல் எனப்படும் அரசியல் நூல்நெறி பிறழாமல் சிறந்த மற்ற நலங்களும் இனி சொல்லத் தொடங்கினேன்' என்பது அப்பாடலின் கருத்தாகும். வளன் சனித்த படலத்தில், நாட்டின் வாழ்வு எங்ஙனம் நிகழ்ந்தது என்பதைக் குறிக்கும் போது, செங்கோல் முறையில் நலம் விளைந்து, நூல்கள் மூலம் ஏற்படும் கல்வி நலமும் செல்வநலமும் அறத்தின் நலமும் நிறைந்திருந்ததாகக் குறிப்பிடுகின்றார் முனிவர். கல்வி நலம் பெற நூல்கள் துணை புரியும் என்பதை உணர்த்துகிறார். இதனை,*

*கோல் நலம் கோடு இலா நிறுவிக் கூர்த்தலால்*

*நூல் நலம் பொருள் நலம் அறத்தின் நுண் நலம்*

*தேன் நலம் இனிதினில் திளைத்து, நாடு எலாம்*

*மீன் நலம் பயின்ற வான் வியப்ப வாழ்ந்ததே*

*வளன் சனித்த படலம்- 7.*

*எனும் பாடல் மூலம் அறியலாம். வானவர்கள் கன்னிமரியாளின் அடியைப் பூசனை செய்து அணிந்ததை முனிவர்,*

*துறை கெழு நூல் வழி அனைத்தும் அடையா ஞானத்*

*துறை அன்னாள், மாசு அ றுநல் உணர்வின் நீர்த்து*

*மறை கெழு நூல் வழி வழுவா, கடவுள் நல் தாள்*

*மாற இல மெய்ஞ் ஞான நலம் அமைந்ததற்கே,*

*முறை கெழு நூல் வழி அன்ன வெய்யோன் வானின்*

*முடுகு வழி விடா திரியும் இரவிக் காந்தம்,*

*அறை கெழு நூல் வழித் தொடை போல் தொடையல் ஆக்கி*

*அருச்சனை செய்து, அடி அணிந்தார் ஒரு நூறு அன்றோ.*

*(ஐய நீங்கு படலம் 53.)*

*என்று உரைப்பதிலிருந்து மரியாளின் இயல்பைக் குறிக்கிறார். அனைத்து அறிவு நூல்கள் வழியாகவும் அடைய இயலாத ஞானத் துறைமுகம் போன்றவள் மரியாள் என்று குறிப்பிடுகிறார். தெய்வ நூல் என்பது வேதப் பொருள் நிறைந்தது என்றும், பகலவனின்*

*பயணம் நீதிமுறை பொருந்திய நூல் போன்றது என்றும்,செய்யுள் நூல் இயற்ற கருவியாய் விளங்குவன எதுகை, மோனை முதலிய தொடைகள் எனவும் எடுத்துரைக்கிறார்.*

**நூலறிவு**

*நூல் நகத் துளங்கி, கேள்வி நுண் அறிவாளர் ஒவ்வா,*

*வானகத்து ஒதுங்கி வாழும் வரும் பொருள் காட்டும் காட்சி*

*கானகத்து ஒதுங்கி வைகும் கடித் தவத்தோடும் இன்ன*

*கோன் அகத்து இலங்கி, அங்கண் குடி என வதிந்த தாம் ஆல்*

*(வளன் சனித்த படலம் 34)*

*எனும் இப்பாடலில் வளனின் காட்சி, நூல் அறிவையும் இகழுமாறு அமைந்திருந்தது எனக் குறிப்பிடுகிறார். வளனின் திருக்காட்சி முன்பு, நூல் அறிவு போற்றத்தக்கதல்ல என்ற கருத்து இதன் மூலம் பெறப்படுகிறது. அனைத்து அறிவுக்கும் மேம்பாடு உடையவன் வளன் என்பதை இங்ஙனம் எடுத்துரைக்கிறார். மேலும் தாவிது, நூலறிவு பெற்று தன்னை வெல்லுமாறு ஐம்புலன்களையும் அடக்கிக் காத்து வந்த செய்தியை வீரமாமுனிவர்*

*வேலொடு மாற்றார் வெள்ளம் வென்று வென்று அடக்கி, தன்னை*

*நூலொடு வெல்ல ஐந்து துன்புலன் அடக்கிக் காத்து,*

*கோலொடு வழாமை நீதிக் கொழுந்து சேர் கொழுகொம்ப ஆனான்,*

*சூலொடு வழங்கும் மாரித் துளி பழித்து அருளும் கையான்.*

*வளன் சனித்த படலம் 36.*

*என்று குறிப்பிட்டுள்ளார். நூலறிவு பெறுவதன் நோக்கம் அடக்கவுணர்வு போன்ற நல்லுணர்வுகளைப் பெறுவது என்ற கருத்தினை வீரமாமுனிவர் வலியுறுத்தியுள்ளார்.*

**நூலின் திறம்**

*நூலின் திறம் குறித்து உரைக்கும் வீரமாமுனிவர்,*

*மைந் நூற்று எனக் கரும் பூங் குழலாள் வாய்ந்த மகன் நலம் கேட்டு,*

*எந் நூல் திறத்தினும் மேல் அடியின் வீழ்ச்சி இனிது இயற்றி,*

*மெய் நூல் திறத்த மறை முறையின் விள்ளா வினை எல்லாம்*

*கை நூல் திறத்து அறவோர் இயற்றி ஆசி கனிந்து உரைத்தார்.*

*(வளன் சனித்த படலம் 58.)*

*எனும் பாடலில் இறைவன் நூலின் திறத்திற்கெல்லாம் மேலானவன் என்பதையும், உண்மையான நூலின் அடிப்படையில் அமைந்தது வேத நூல் என்ற கருத்தினையும், குருக்கள் எல்லாம் ஒழுக்க நூல் கற்றறிந்தவர்கள் எனும் கருத்தினையும் விளக்கியுள்ளார்.*

**நூலின் நுண்பொருள்**

*சூசையின் இளமைப்பருவத்து மாண்புகளை எடுத்துரைக்கும் பகுதியாகிய பால மாட்சிப் படலத்தில் சோலையின் தேனடையிலிருந்து சொட்டிய தேன், மாலையிலிருந்து வழியும் தேன், கரும்பாலையிலிருந்து கரும்பு பிழியத் தந்த சாறாகிய தேனும் பற்றி, நூலை ஆராய்ந்து நுண்பொருள் காண்பது போல் கருதிப் பார்த்து இன்பத்தில் மூழ்குவதை,*

*சோலை வாய் இறால் துளித்த தேறலும்*

*மாலை வாய் மலர் வழித்த தேறலும்,*

*ஆலை வாய்க் கழை அளித்த தேறலும்*

*நூலை ஆய்ந்து என நுதலி மூழ்குவான்*

*பால மாட்சிப் படலம் 8.*

*எனப் பாடுகிறார். நூலை ஆய்ந்து நுண்பொருள் காண்பதை இன்பமாகக் கருதி முனிவர் இங்ஙனம் உரைத்துள்ளார்.*

**நூலின்பயன்**

*சூசையும் மரியாளும் இறைவன் திட்டத்தின்படி திருமணம் புரிந்து கொண்ட நிகழ்வினைச் சுட்டும் போது,*

*அன்பும் இல்லன, எனது உனது என்பதில் ஆர்வ*

*நன்பும் இல்லன, வஞ்சனை கற்கலால் நல்நூல்*

*பின்பும் இல்லன, தீயவை இனிது எனப் பெட்டற்கு*

*இன்பும் இல்லன, இச்சையால் வறுமை உள்ளதுவே*

*(திருமணப் படலம் 14.)*

*ஏன்று குறிப்பிடுகிறார். இப்பாடலில் வஞ்சனையைக் கற்கும் பழக்கம் உள்ளவர்களால் நல்ல நூல்களைப் பின்பற்றும் சூழல் இல்லாததை எடுத்துரைக்கிறார். கன்னி மரியாளின் கருப்பம் பற்றி எழுந்த ஐயம் நீக்கிச் சூசை தெளிவு பெறுகின்ற போது, மரியாள் வானகம் சென்று சூசைக்குக் காட்சி தருகிறாள். அப்பொழுது, " அவள் தானே (மரியாள்) தனக்கு அடிமையாகிய நான் சொல்லத் துணிந்து சென்ற இந்நிலை கண்டு இரக்கங்கொண்டு, வேண்டிய துணிவையும் செய்யுள் வளத்தையும் என்னோடு திருத்தித்தந்தால் அல்லாமல் எனக்கு மட்டும் என்ன? பல கல்வித் துறையிலும் சிறந்த நல்ல நூல்களையெல்லாம் கற்று வென்ற நிலையான உணர்வு உடையவர்க்கும் அது இயலுவதோ?" என்று குறிப்பிடுகிறார்.*

*நின்ற நிலை தன்மையும் அன்ற ஆய யாவும்*

*நினைத்து உரைப்ப, நின்றாள் தான் தனக்கு ஆள் ஆய் நான்*

*சென்ற நிலை கண்டு இரங்கி, துணிவும் பாவும்*

*திருத்தித் தந்தால் அல்லால், துறை வல் நல் நூல்*

*வென்ற நிலை கொண்ட உணர்வோர்க்கும் பாலோ?.....*

***(ஐய நீங்கு படலம்- 45.)***

*புலவர்கள் செய்யுள் இயற்றும் திறன் படைத்திருந்தாலும் இறையருள் இருந்தால் தான் என்ற கருத்து இப்பாடலில் இடம் பெறுகிறது. மேலும், நல்ல நூல்களைக் கற்றுணர்ந்தவர்கள் நிலையான உணர்வினை உடையவர்களாக இருப்பர் என்ற கருத்தும் பெறப்படுகிறது. நூல் வல்லவர்களாக இருப்பவர்கள் தற்பெருமை கொள்ளார் என்ற கருத்தினை முனிவர் எடுத்துரைத்துள்ளார். இதனை மகிழ் வினைப் படலத்தில்*

*" சால் ஓர் பொருளால் நிறை பொற் கலமே தரும் ஓர் தொனியோ?*

*நூலோர் இயக்கம் பேசார்...."*

*(மகிழ்வினைப் படலம் 19.)*

*கருப்பம் தரித்துள்ள மரியாள் அழகிய ஒளியை வீசும் தகைமையோடு, வேத நூலிடத்துக் கற்றுத் தெளிந்த ஞானத்தை உமிழ்ந்த தன்மை உடையவளாக இருந்ததைக் குறிப்பிடுகிறார்.*

*தான் முகத் திரு வில் வீசும் தகுதியால், தெளிந்த ஓதி*

*நூல் முகத்து உமிழ்ந்து, தீம் தேன் நுகர்ந்த வாய் மலர்ந்து சொல்வாள்:*

*(மகிழ்வினைப் படலம் 72.)*

*இதன் மூலம், வேத நூல்களைப் படித்துத் தெளிந்தால் ஞானம் பெறமுடியும் என்ற கருத்தை உணர்த்தியுள்ளார்.*

*மரியாள் தான் கருப்பம் தரித்த முறையினை எடுத்துரைக்கும் போது,*

*" நூல் நெறி வழங்கா வண்ணம், நுதலிய கருணைச் சால்பில்*

*சூல் நெறி நர தேவு ஆகித் தோன்றிய பின்னர்………"*

*(மகிழ்வினைப் படலம் 74)*

*என்று குறிப்பிடுவதாக வீரமாமுனிவர் காட்டுகிறார். தனக்கு ஏற்பட்ட கருணை மேன்மை என்பது இலக்கிய நூல்களின் கற்பனை முறையிலும் காணப்படாத முறை என்று*

*குறிப்பிட்டுள்ளார். மேலும் இறைவனின் கருணைச் செயல் நல்ல நூல் துறைகளிலெல்லாம் வல்லோரும் உணரும் தன்மையதோ? என்று வினவுவதை,*

*" ஈட்டிய நலங்கள் குன்றா இறைவனும் என்பான்; இவ்வாய்ச்*

*சூட்டிய கருணை நல் நூல் துறை வலோர் அடையும் பாலோ?*

*(மகிழ்வினைப் படலம் 76.)*

*என்று பாடுகிறார். இறைவனின் கருணைச் செயலை அறிவதற்கு நூலறிவு மட்டும் பயன் தராது என்ற கருத்தினை உணர்த்துகிறார். நூல்கள் மூலம் பெறும் அறிவு எல்லைக்குட்பட்டது என்றும், இறைவனின் கருணை எல்லையில்லாதது என்ற கருத்தும் இப்பாடல் மூலம் பெறப்படுகிறது.*

***முடிவுரை:***

1. *வளன் பிறந்த சூதேய நாட்டில் பல நூல்களைக் கற்றவர்கள் நிறைந்துள்ளதை வீரமாமுனிவர் எடுத்துரைத்துள்ளார்.*
2. *வளனின் காட்சி, நூலறிவினையும் இகழும் வண்ணம் அமைந்துள்ள நிலை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.*
3. *நூல்களை ஆய்பவரே நுண்பொருள்களைக் காண்பவராவர் என்ற கருத்து விளக்கப்பட்டுள்ளது.*
4. *நல்ல நூல்களைக் கல்லாதிருப்பவர்களிடத்தே வஞ்சனை மிகுந்திருக்கும் என்ற கருத்தினை வீரமாமுனிவர் உணர்த்தியுள்ளார்.*
5. *நல்ல நூல்களைக் கற்றவர்க்கே நிலையான உணர்வுகளை உடையவராக இருப்பவர் என்று எடுத்துரைத்துள்ளார்.*
6. *வேத நூல்களைப் படித்தே ஞானத்தைப் பெற முடியும் என்று விளக்கப்பட்டுள்ளது.*
7. *இறைவனின் கருணை நூலறிவிற்கும் மேலானது என்று வீரமாமுனிவர் அறிவுறுத்தியுள்ளார்.*

***துணை நூல்கள்***


1. *பேராசிரியர் வி. மரியஅந்தோணி, வீரமாமுனிவர் எழுதிய தேம்பாவணி முதற் காண்டம், வீரமாமுனிவர் ஆய்வுக் கழகம் தூய சவேரியார் கல்லூரி, பாளைங்கோட்டை,*
2. *புலவர் அ. மாணிக்கம், நன்னூல் தெளிவுரை,பாரதி பதிப்பகம்,சென்னை-17.*